மாங்கிளியும் மரங்கொத்தியும் கூடு திரும்ப தடையில்ல
நாங்க மட்டும் உலகத்தில நாடு திரும்ப முடியல்ல 2

சிங்களவன் படைவானில் நெருப்பை அள்ளிச் சொரியுது
எங்களுயிர் தமிழீழம் சுடு காடாய் எரியுது 2
தாய் கதற பிள்ளைகளின் நெஞ்சுகளை கிழிக்கிறான்
காயாகும் முன்னே இளம் பிஞ்சுகளை அழிக்கிறான் 2

மாங்கிளியும் மரங்கொத்தியும் கூடு திரும்ப தடையில்ல

பெத்தவங்க ஊரில ஏங்குறாங்க பாசத்தில
எத்தனை நாள் காத்திருப்போம் அடுத்தவன் தேசத்தில 2
உண்ணவும் முடியுதில்ல உறங்கவும் முடியுதில்ல
எண்ணவும் முடியுதில்ல இன்னும் தான் விடியிதில்ல 2

மாங்கிளியும் மரங்கொத்தியும் கூடு திரும்ப தடையில்ல

கிட்டுப்புல்லு அடிச்சு நாங்க விழையாடும் தெருவில
கட்டி வச்சு சுடுகிறானாம் யார் மனசும் உருகல 2
ஊர் கடிதம் படிக்கையில விம்மி நெஞ்சு வெடிக்குது
போர் புலிகள் பக்கத்தில போக மனம் துடிக்கிது 2

,சைத்தட்டு : இருப்பாய் தமீழாய் நெருப்பாய்
பதிப்பகம் : அகம்